செ.வெ.எண்: 35/பிப்ரவரி நாள் : 19.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு இந்திரா நினைவுத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளது. மேற்படி திட்டத்தில் புதிய வீடு கட்டிட விரும்புவோர், கீழ்கண்ட ஆவணங்களுடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திட்ட இயக்குநர் அலுவலகத்தில் **22.02.2016க்குள்** விண்ணப்பித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. மனுதாரர் பெயரில் சொந்தமாக நிலம் உள்ள விபரத்திற்குரிய ஆவன நகல் அல்லது இலவச வீட்டுமனைப் பட்டா நகல்
2. குடும்ப அட்டை நகல்
3. ஆதார் அட்டை நகல்
4. வங்கி கணக்கு புத்தக நகல்

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**